# மன்னராட்சி (கட்டாய வாக்களிப்பு)

**மனிதர்களின் வீடுகளைக் காணவில்லை**

சென்ற காலங்களில் மன்னர்கள் ஆட்சிமுறை உலகம் முழுவதும் நடைபெற்று வந்தது என்பது அனைவரும் அறிந்தது. சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதி வரை மன்னர்களின் ஆட்சிமுறை இந்தியாவில் அநேகமாக எல்லா இடங்களிலும் இருந்திருக்கிறது. அவர்கள் காலத்திய மனித இனம் வாழ்ந்ததற்கு அடையாளங்களாக கோயில்கள், அரண்மனைகள், சில சத்திரம் சாவடிகள் மட்டுமே இப்போது காணப்படுகின்றன. ஆனால் அப்போது வாழ்ந்த மனிதர்களின் வீடுகளாக ஒரு சிலவற்றைத் தவிர அநேகமாய் இப்போது எதுவும் அடையாளங்களுக்கு இல்லாமல் இருக்கிறது. இதற்கானக் காரணங்கள் என்னவாய் இருக்கும் என யோசிக்கக் கட்டாயப்படுத்துகிறது!

மன்னர்கள் ஆட்சியின்போது அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகள் கண்டுபிடிக்கப்படாததால் அந்நாளைய மக்கள் வாழ்ந்த வீடுகள் இவைகளினால் அழிக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை. அன்றைய கற்களால் கட்டப்பட்ட வீடுகள், மச்சி, மாடி, ஓட்டு வீடுகளாக இருந்திருந்தால்கூட இவ்வளவு நாட்களில் சேதமுற்றிருந்தாலும், கொஞ்சமாவது மிச்சங்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படியும் அதிகமாக எங்கேயும் இருப்பதாகத் தெரியவில்லை. மந்திரி பிரதானிகள், தளபதி போன்றோர் இம்மாதிரியான வீடுகளில் ஒருவேளை வாழ்ந்திருக்க வேண்டும். இருப்பினும் அவற்றின் அடையாளங்களும் இந்நாட்களில் அதிகம் கிடைக்கப்பெறவில்லை.

இவர்களைத் தவிர மற்ற மொத்த மக்கள் அனைவரும் சாதாரண சிறிய மண், கீற்றுக் குடிசைகளில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது உறுதியாகிறது. அப்படியான வீடுகள் நீண்ட நாட்கள் தாக்குப்பிடிக்க முடியாத காரணத்தினால் மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களால் காணாமல் போயிருக்க வேண்டும். எனவேதான் இப்போது அந்நாளைய அப்படியான வீடுகளின் ‘படிவு’ மாதிரிகள் கூட கிடைக்காமல் போயிருக்கிறது.

**பலம் குறைக்கப்பட்ட மக்கள்**

இந்நிகழ்வுகள் எல்லாம் ஒன்றை உறுதியாக சொல்கின்றன; அந்நாளைய மக்கள் அனைவரும் அடிமைகளாகவும், மன்னர்களும் அவர்களது குடும்பங்களும் கடவுளுக்கு இணையாகவும் கருதப்பட்டுருக்கின்றனர். மக்களுக்கு வயிற்றுக்கு ஓரளவிற்கு கால் வயிறு, அரை வயிறு உணவு மட்டும் எப்படியோ கிடைத்து வந்திருக்கிறது! இந்த உணவு வழங்குதலை மன்னர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்து நடத்தி வந்திருக்கிறார்கள். மற்றபடி அதிகப்படியான உரிமைகள், வசதிகள், பொது சுகம் போன்றவற்றைக் கொடுக்காமல் பரம ஏழைகளாக, பாவப்பட்டவர்களாக நடத்தப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது!

இது எதற்கு செய்யப்பட்டிருக்க வேண்டுமெனில், மக்களின் முழு வயிற்றுக்கு உணவு, நல்ல வீடுகள், மகிழ்ச்சியான வாழ்க்கை, பல ருசிகளின் சுகங்கள், உரிமைகள் கொடுக்கப்பட்டிருந்தால், அம்மக்கள் மன்னர்களை மதித்திருக்கமாட்டார்கள் என எண்ணிருக்க வேண்டும்! மன்னர்கள் மதிக்கப்படாமல் போயிருந்தால், முன்பு இருந்த ராஜா ஆட்சி முறையும், ராஜா ராணிகளும் ஆடிப்போயிருப்பார்கள். எனவே, மக்களை தங்கள் காலடிகளில் விழுந்துக்கிடக்க வைத்திருப்பதின் மூலமே தாங்கள் தொடர்ந்து கடவுளாகப் பரிணமிக்க முடியும் என்பதை பரம்பரையாக வந்த ராஜா குணங்கள் உணர்ந்திருந்தன.

இப்போதும் சில நாடுகளில், சில பகுதிகளில் அங்கு மன்னர், மன்னி ஆட்சி முறை இல்லாத நிலையிலும் கூட அதையொத்த ஒரு தோற்றம் தெரிகிறது. ஒரு நாளைக்கு ஒரு வேளை வீதம், மக்களுக்கு சத்துணவு என்ற பெயரில் சத்துக் குறைந்த சுமாரான அரிசி உணவு கொஞ்சம் மற்றும் ஒரு சாதாரண உறைவிடம் போன்றவைகளைக் கொடுத்து, அதிகம் சிந்திக்க இயலாத உடல் பலக்குறைவுடன், ஆனால் உயிரோடு

இருக்கும்படியாக ராஜா, ராணிகள் வைத்துக்கொணடிருந்ததைப்போல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**ஓட்டுகளுக்காக வளர்க்கப்படும் சோத்துக் கூட்டம்**

மனிதர்கள் சிந்தித்து, உரிமைகளை உணரும், கேட்கும் நிலைகளுக்குப் போகாமல் இருக்குமாறு பராமரித்துக் கொண்டு வருகிறார்கள். இன்றைய நிலையில், இந்த ராஜா, ராணி ‘மாதிரி’ களுக்கும், சிந்தனையற்ற மனித கூட்டத்திற்கும் இடையில், இடைத்தரகர்களாக எதற்கும் துணிந்தவர்கள் பலர் கொட்டமடித்து கொண்டாட்டம் போட்டுக் கொண்டிருக்கும் நிலை நிலவுகிறது.

இந்த சோத்துக் கூட்டத்திடமிருந்து ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அல்லது அதற்குள்ளாகவே தங்களுக்கு ஓட்டுப் பெறும் முறையில் இவர்களை நிர்வகித்து வருகிறார்கள். அத்துடன் மற்ற சிந்திக்கும் மனிதக் கூட்டம் அதிகமாக ஓட்டுப்போட்டுவிடாமலும், அதன் மூலம் தீயவர்களானத் தங்களை மாற்றிவிடாமல் இருக்கும்படியாகவும் அரசியல் சாசன சட்டத்தை வைத்துக் கொள்கின்றனர்.

ஏதேதோ குப்பைச் சங்கதிகளுக்கு ஜனநாயக நாட்டில் மக்களைக் கட்டாயமாக்கி, அதற்கு மீறுவோரை கடுமையாகத் தண்டிக்கும் சட்டங்கள் பல கொண்டிருக்கும் நாடுகள், வாக்காளர்கள் அனைவரும் ஓட்டுப் போடுவதை ஏன் கட்டாயமாக்கவில்லை? இதை கட்டாயமாக்கினால் நாடு, அரசியல், மக்கள் சுந்திரம் ஆகியவை அழிந்துவிடுமா என்ன? வாக்களிப்பதைக் கட்டாயமாக்கி யாருக்கு ஒட்டுப்போட விருப்பமில்லாதவர்களுக்கும் அதை தெரிவிக்க வாய்ப்பு இருக்குமாறு வாக்குச் சீட்டை தயாரித்தால் போதுமே. அனைத்து மக்களின் மொத்த விருப்பம் தெரியப்பட்டு அமைந்தால்தான், அது அனைவருக்குமான ஆட்சியாக அமையும்.